**இழப்பீடுகளுக்கான அலுவலகம்**

**அறிவித்தல்**

**2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதிக்குப் பங்களிப்பு நல்குமாறு உதவி நல்குவோர் மற்றும் நன்கொடையாளர்களுக்கு அழைப்பு விடுத்தல்**

உயர் நீதிமன்றத்தின் SCFR இலக்கங்கள் 163/2019, 165/2019, 166/2019, 184/2019, 188/2019, 191/2019, 193/2019, 195/2019, 196/2019, 197/2019, 198/2019, 293/2019 எனும் தீர்ப்பினூடாக இவ் அலுவலகத்திற்கு உத்தரவிடப்பட்டதற்கமைய -

அ) ஏப்ரல் 21, 2019 அன்று நிகழ்ந்த குண்டுத் தாக்குதல்களினால் பாதிப்பிற்குள்ளானவர்கள் மற்றும் பாதிப்பிகுள்ளான குடும்பங்களுக்கு நட்டஈட்டினை வழங்க பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியினை நிறுவுதல் மற்றும்

ஆ) பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான மற்றும் சமமான முறையில் நட்டஈட்டினை வழங்குவதற்கான திட்டத்தினை உருவாக்குதல் மற்றும்

இ) இந்த நிதிக்குத் தாராள சிந்தையுடன் உதவி நல்கக் கூடியவர்கள் மற்றும் நன்கொடையாளர்களுக்கு அழைப்பு விடுத்தல்.

இழப்பீடுகளுக்கான அலுவலகமானது ஒரு நிதியினை நிறுவி, குறித்த நிதியின் மூலம் பெறப்பட்ட பணத்திலிருந்து நட்டஈட்டினை வழங்குவதற்கான திட்டத்தை உருவாக்கியுள்ளது. குறித்த திட்டம் இவ் அலுவலகத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. www.reparations.gov.lk

இழப்பீடுகளுக்கான அலுவலகமானது இந் நிதியில் பங்களிப்புபினை நல்க விரும்புவோரிடம் பின்வரும் கணக்கில் தங்கள் பங்களிப்பினைச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறது-

**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் 2019- பாதிப்பிற்குள்ளானோருக்கான நிதி**

நடைமுறைக் கணக்கு. 0090167960
இலங்கை வங்கி, இராஜகிரிய கிளை
608/1, நாவலை வீதி, இராஜகிரிய.

தலைவர்,
இழப்பீடுகளுக்கான அலுவலகம்
இல: 40, புத்தகமுவ வீதி,
இராஜகிரிய
2023.01.29